# தலைக்கவசம் அணியாமல் விபத்தில் இறப்போரின் எண்ணிக்கை அதிகம்

டாக்டர் எல்.பி.தங்கவேலு

**சத்தியமங்கலம், ஏப். 8:** தலைக்கவசம் அணியாமல் விபத்தில் இறப்போரின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக கோவை, அஸ்வின் மருத்துவ மனைத் தலைவர் எல்.பி.தங்கவேலு தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார தினத்தை யொட்டி, சத்தியமங்கலம், பண்ணாரி அம்மன் தொழில்நுட்பக் கல்லூரியில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இக்கருத்தரங்கிற்கு, கல்லூரித் தலைவர் எஸ்.வி.பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார். இதில், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற கோவை, அஸ்வின் மருத்துவமனைத் தலைவர் எல்.பி.தங்கவேலு பேசியது:

நாட்டில் பாதுகாப்பற்ற உணவுப் பழக்கத்தால் ஆண்டுக்கு 20 லட்சம்பேர் உயிரிழக்கின்றனர். நாடு முழுவதும் நிகழும் சாலை



உலக சுகாதார தின விழிப்புணர்வுக் கூட்டத்தில் பேசுகிறார் கோவை, அஸ்வின் மருத்துவமனைத் தலைவர் எல்.பி.தங்கவேலு.

விபத்துகளில் ஆண்டுக்கு 1.75 லட்சம் பேர் இறக்கின்றனர். இதில், தமிழகத்தில் உயிரிழப்போரின் எண்ணிக்கை 16,000 ஆகும். குறிப்பாக தலைக்கவசம் அணியாமல் விபத்தில் இறப்போரின் எண்ணிக்கை அதிகம். நோயின்றி வாழ காய்கறிகளை அதிகம் உண்ண வேண்டும். காலை உணவை தவறாமல் உண்ண வேண்டும். நொறுக்குத்தீனி அறவே கூடாது. எந்தவொரு செயலையும் முயன்று தோற்றால் அனுபவம், முயற்சி செய்யாமல் தோற்றால் அவமானம் என்றார்.

இந்நிகழ்ச்சியில், யோக போட்டி, சர்க்கரை நோய் விழிப்புணர்வு, இதயநோய் ஆவணப்படம் மற்றும் புற்றுநோய் கருத்தரங்கம் ஆகியவை நடைபெற்றன.